12th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : குறுவை ஸீஸனில்தான் போடவேண்டு மென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் தெரியாமல் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, it is a fact that there is confusion in the Agriculture Department with regard to the sowing of the seed, ADT-27. They say that it has to be sown during the Sambha season in the Thanjavur district and some other season in other districts. So, may I have a clarification in respect of this matter from the Hon. Minister?

(பதில் இல்லை.)

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சையிலே இருக்கிற ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் புதிதாக இந்த ஆண்டு வழங்கப்போகிற 2,00,000 ஏக்கர் நிலத்திற்குப் பிரத்தியேகமாக உரத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய, வேண்டிய உரத்திற்கு அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாகவும், நிச்சயம் கிடைக்கும் என்றும் கூறியிருக்கிறார். அது போன்று வழிவகை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நான் ஏற்கனவே இந்த மன்றத்தி லேயே சொன்னேன். 5,000 டன் விதை அரசாங்கப் பண்ணையி லிருந்து கிடைத்திருக்கிறது. அதைத் தவிர இதர கிராம விவசாயி களிடமிருந்து. . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் உரத்தைப் பற்றிக் கேட்கிறார். 5,000 ஏக்கருக்கு காரண்டி செய்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யலாமே தவிர, காரண்டி கொடுப்பதற் கில்லை.

திருத்துறைப்பூண்டியில் வெடி விபத்து

*261 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்பட்டரையில் அண்மையில் வெடி விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

(உ) அதனால் உயிர் இழந்தவர்கள் எத்தனைபேர் ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The District Revenue Officer, Thanjavur who conducted the enquiry under section 9 (1) of the Indian Explosives Act, 1884 has reported that the exact cause of the explosion could not be ascertained but that the accident may have been due to careless handling of the explosive substance.

(c) Five persons.

[12th March 1966

9-00 உ.மு. திரு. ஆ. கு. சுப்பையா : இந்த விபத்திற்குக் காரணமானவர்களின் மீது இன்னும் வழக்கு தொடராமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கு தொடரப்படாமல் இல்லை.

It has been reported that the licensee Sri Aziz was arrested on 27—11—1965 and released on bail.

போலீஸ் துறை மாநாடு

* 262 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களில் தொழில் அமைதிக்காகவும், துறைமுகங்களின் அமைதிக்காகவும் இரண்டு வித போலீஸ் படைகளை நிறுவ வேண்டுவது பற்றி ஜூன் மாதத்தில் டில்லியில் நடைபெற்ற போலீஸ்துறை மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது இம்மாநில அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மாநிலத்திலுள்ள போலீஸார் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒட்டியும், ஒவ்வொரு துறைக்கும் ஒரு போலீஸ் இருந்தால் நல்ல முறையில் லா அண்டு ஆர்டர் கவனிக்கப்படும் என்பதை ஒட்டியும், தொழில் அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், துறைமுக அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், பொதுவாக ஒரு போலீஸ் படையும் இப்படி மூன்று படைப் பிரிவுகள் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் முதலில் கேள்வி கேட்டது போலீஸ் துறை மாநாட்டில் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டதா என்பது. அது தான் இல்லை என்று பதில் சொன்னேன். இந்த அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. குறிப்பாக தொழிற்சாலைகளைக் கவனிப்பதற்குத் தனியாக போலீஸ் வைப்பது என்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்திருக்கிறது. அவ்வாறு செய்வது நல்லது என்று இந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. போர்ட் டிரஸ்டைப் பொறுத்த மட்டிலும், ஏற்கனவே மெட்ராஸ் ஸிடியில் ஹார்பர் போலீஸ் என்று இருக்கிறது. அதுவே இருந்தால் நல்லது. அதற்காக தனியாக போலீஸ் வைக்கவேண்டாம் என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது.